தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண். 064/ந/2022
நாள்.16.06.2022

திரு.P.மகேந்திரன்,
வந்தவாசி. – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
வந்தவாசி நகராட்சி. – எதிர்மனுதாரர்

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி, காஞ்சிபுரம் ரோடு, சவேரியர்பாளையம், கதவு எண். 16, என்ற முகவரியில் வசிக்கும் திரு.P.மகேந்திரன், என்பவரின் 18.05.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 23.05.2022 அன்று பெறப்பட்டு 064/ந/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி, காஞ்சிபுரம் ரோடு, சவேரியர்பாளையம், கதவு எண். 16, என்ற முகவரியில் வசிக்கும் திரு.P.மகேந்திரன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"எனது தாயார் திருமதி.P.கிளியம்மாள் என்பவர் வந்தவாசி பேரூராட்சியில் துப்புரவு பணியாளராக பணி அமர்ந்து பின்பு நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது தொடர்ந்து எனது தாயார் 30 ஆண்டுகள் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து ஜுன் 2003ல் உடல் நலக்குறைவால் விருப்ப ஓய்வு (VRS) கொடுத்துள்ளார்கள். அதன் பிறகு 10.08.2003ல் இறந்து விட்டார்கள். அவருக்கு வந்தவாசி நகராட்சியில் இருந்து வரவேண்டிய சேமிப்பு பணம் ரூ.25,000/– + 10,000/– = ரூ.35,000/– மட்டும் கொடுத்துள்ளார்கள். எனது தாயார் (P.கிளியம்மாள்) சேமிப்பு, ML, PF, EL, SPL PF இவற்றிற்கு உண்டான பணம் வழங்க வேண்டுகிறேன்.

நகராட்சியில் பலமுறை கேட்டதற்கு சரியான பதில் இல்லை. நான் கூலி வேலை செய்து வருகிறேன். எனக்கு வேறு வருமானம் இல்லை. இத்துடன் எனது தாயார் இறப்பு சான்று, எனது வாரிசு சான்று மற்றும் ஆதார் கார்டு இணைத்துள்ளேன். ஆவன செய்யுமாறு பணிவுடன் வேண்டுகிறேன்" என தெரிவித்துள்ளார்.

(2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் **09.06.2022** நாளிட்ட கடிதம் மூலம் வந்தவாசி நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

வந்தவாசி நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர் (பொ) ஆக பணிபுரியும் திரு.தா.ஜெயபிரகாஷ் நாராயணன் என்பவர் தனது **13.06.2022** நாளிட்ட அறிக்கையில் பின்வரும் விவரங்களை தெரிவித்துள்ளார்:

"தற்போது ஆணையாளராக பணிபுரியும் திரு.S.முஸ்தபா என்பவர் **11.06.2022** முதல் **19.06.2022** வரை ஈட்டிய விடுப்பில் சென்றுள்ளார். மேலாளர் பதவியும் காலியாக உள்ளது. திருமதி.கிளியம்மாள் (லேட்) தூய்மை பணியாளர் என்பவர் விருப்ப ஓய்வில் சென்று சுமார் 20 வருடங்களுக்கு மேலாக உள்ளது. நகராட்சி அலுவலகத்திற்கான கட்டிடம் மூன்று முறை மாற்றம் செய்யப்பட்டுள்ளது. திருமதி.கிளியம்மாள் என்பவரின் சம்மந்தப்பட்ட கோப்புகள் தேடப்பட்டு வருகிறது. இருபது ஆண்டுகளுக்கு மேலாக உள்ளதால் கோப்புகள் கிடைப்பது சற்று கடினமாக உள்ளது. எனவே, திருமதி.கிளியம்மாள் (லேட்) தூய்மை பணியாளரின் கோப்புகள் சமர்ப்பிக்க கால அவகாசம் தேவைப்படுவதால் மூன்று மாத கால அவகாசம் வழங்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் வந்தவாசி நகராட்சி ஆணையரும் **14.06.2022** அன்றைய விசாரணைக்கு ஆஜராகுமாறு **09.06.2022** தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு.P.மகேந்திரன், **09.06.2022** அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி பின்வரும் தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"எனது தாயார் திருமதி.P.கிளியம்மாள் என்பவர் வந்தவாசி நகராட்சியில் 30 ஆண்டுக்கு மேலாக துாய்மைப் பணியாளராக பணிபுரிந்து, உடல் நலக்குறைவு காரணமாக ஜூன் 2003–ல் தன்விருப்ப ஓய்வு பெற்று, 10.08.2003 அன்று காலமாகிவிட்டார்.

எனது தாயாருக்கு சேர வேண்டிய ஓய்வூதியப் பணப் பலன்களில், அவரது சேமிப்பு பணத்தில் ரூ.35,000/– (ரூ.25,000/–+ரூ.10,000/–) மட்டும் வந்தவாசி நகராட்சி மூலம் அளிக்கப்பட்டது. ஆனால் எனது தாயாரின் ML, EL, PF மற்றும் SPF போன்றவற்றிற்கான பணப்பலன்களை வழங்கக் கோரி வந்தவாசி நகராட்சி அலுவலகத்தில் பலமுறை முறையிட்டும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, எனது தாயாருக்கு சேரவேண்டிய பணப்பலன்களை வந்தவாசி நகராட்சி மூலம் விரைந்து வழங்கிட ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரான வந்தவாசி நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையர் பொறுப்பில் இருக்கும் திரு.தா.ஜெயபிரகாஷ் நாராயணன் சார்பில் வந்தவாசி நகராட்சியில் கணக்காளராக (மேலாளர் (பொ) பணிபுரியும் திருமதி. A.பிரேமா மற்றும் சுகாதார ஆய்வாளராகப் பணிபுரியும் திரு. எஸ். ராமலிங்கம் ஆகியோர் **14.06.2022** அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்கள்:

"மனுதாரர் திரு.P.மகேந்திரன் மனுவில் குறிப்பிட்டுள்ளபடி அவரது தாயார் திருமதி. கிளியம்மாள் என்பவர் **31.05.2003**ல் விருப்ப ஓய்வு பெற்று சென்றுவிட்டார். மேலும் **10.08.2003**ல் காலமாகிவிட்டார். அவருக்கு சேரவேண்டிய பணப்பலன்கள் குறித்து அவரது வாரிசுதாரர்கள் யாரும் வந்தவாசி நகராட்சியில், மனு ஏதும் அளிக்கவில்லை. தூய்மைப் பணியாளராக பணியாற்றிய திருமதி. P.கிளியம்மாள், தன் விருப்ப ஓய்வில் சென்று சுமார்

20 வருடங்களுக்கு மேலாகி உள்ளதாலும், நகராட்சி கட்டிடம் மூன்று முறை இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாலும், அன்னாரின் பணிப்பதிவேடு மற்றும் அது தொடர்பான கோப்புகள் கிடைப்பது கடினமாக உள்ளதால், அவரது கோப்புகளை கண்டறிந்து மனுதாரரின் தாயார் திருமதி.P.கிளியம்மாள் என்பவருக்கு சேரவேண்டிய அனைத்து பணப்பலன்களையும் அவரது வாரிசுதாரருக்கு முறைப்படி வழங்குவதற்கு ஒரு மாத கால அவகாசம் அளிக்குமாறு இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்கிறோம்'' என தெரிவித்துள்ளார்கள்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், வந்தவாசி நகராட்சி ஆணையரின் அறிக்கை, வந்தவாசி நகராட்சியின் கணக்காளர் மற்றும் சுகாதார ஆய்வாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

மனுதாரரின் தாயார் திருமதி.P.கிளியம்மாள் என்பவர் வந்தவாசி நகராட்சியில் தூய்மை பணியாளராக 30 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றி 31.05.2003 அன்று தன்விருப்ப ஓய்வு பெற்று 10.08.2003 அன்று காலமாகி உள்ளார். வந்தவாசி நகராட்சியில் மனுதாரரின் தாயார் திருமதி.P.கிளியம்மாள் என்பவருக்கு சேர வேண்டிய ஓய்வூதிய பணப்பலனாக ரூபாய்.35,000/– மட்டுமே ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. அவருக்கு சேர வேண்டிய மருந்துவ விடுப்பு (ML), ஈட்டிய விடுப்பு (EL), சேமநல நிதி (PF) மற்றும் சிறப்பு சேமநல நிதி (SPF) போன்ற ஓய்வூதிய பணப்பலன்கள் வந்தவாசி நகராட்சியால் சுமார் 20 ஆண்டுகள் ஆகியும் இதுவரை ஒப்பளிப்பு செய்யப்படவில்லை என்பதால் காலமான திருமதி.P.கிளியம்மாள் என்பவரின் மகன் திரு.P.மகேந்திரன் என்பவர் புகார் அளித்துள்ளார்.

வந்தவாசி நகராட்சியில் ஓய்வு பெறும் பணியாளர்களின் ஓய்வூதியப் பலன்களை வழங்க கூடிய நேர்வுகளை பரிசீலிக்க முறையான பதிவேடுகள் பாரமரித்து உடனுக்குடன் உரிய அலுவலர்களால் ஆய்வு செய்யப்பட்டு ஒப்பளிப்பு செய்யப்பட்டிருந்தால் இவ்வாறு காலதாமதம் என்ற கேள்வியே இடம் பெற்றிருக்காது.

வந்தவாசி நகராட்சி ஆணையரின் அறிக்கையிலும் மற்றும் நகராட்சியின் மேலாளர் மற்றும் சுகாதார ஆய்வாளர் ஆகியோரின் வாக்குமூலத்திலும் மனுதாரரின் தாயார் திருமதி.P.கிளியம்மாள் என்பவர் காலமாகி சுமார் 20 வருடங்களாகியுள்ள நிலையில் அவரது பணிப்பதிவேடு மற்றும் அது தொடர்பான கோப்புகள் கண்டறியப்பட வேண்டியுள்ளது என தெரிவித்திருப்பதிலிருந்து வந்தவாசி நகராட்சி அலுவலகத்தில் ஆவணங்கள் முறையாக பராமரிக்கப்படவில்லை என்பது தெளிவாகிறது. இது மிகவும் கண்டிக்கதக்கது.

மனுதாரர் தனது வாக்குமூலத்தில் தனது தாயார் திருமதி.P.கிளியம்மாள் தூய்மை பணியாளராக தனது வாழ்நாளில் 30 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றி உள்ளார் என தெரிவித்துள்ளார். இதனைக் கருத்தில் கொண்டும், அவர் காலமாகி சுமார் 20 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் வந்தவாசி நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சியின் கணக்காளர் (மேலாளர் பொறுப்பு) மற்றும் சுகாதார ஆய்வாளர் ஆகியோர் இந்நேர்வில் தனிக்கவனம் செலுத்தி வந்தவாசி நகராட்சி அலுவலகம், உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநரகத்திலிருந்து திருமதி.P.கிளியம்மாள்அவர்களின் கோப்புகளை பெற்று வந்தவாசி நகராட்சி தூய்மை பணியாளராக பணியாற்றி காலமான திருமதி.P.கிளியம்மாள் என்பவருக்கு சேரவேண்டிய அனைத்து ஓய்வூதிய பணப்பலன்களையும் அவரது வாரிசுதாரருக்கு முறைப்படி இவ்வாணை வெளியிடப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் ஒப்பளிப்பு செய்யப்படவேண்டும் என வந்தவாசி நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

மேலும் நகராட்சிகளிலிருந்து ஒய்வுபெறும் ஒய்வூதியர்களின் பணப்பலன்கள் காலதாமதமின்றி ஒய்வூதியர்கள் பெற்றிட உடனுக்குடன் தேவையான கருத்துருக்களை உள்ளாட்சி நிதி தணிக்கை துறை இயக்குநருக்கு நகராட்சி ஆணையர்கள் அனுப்பிட உரிய அறிவுறுத்தல்களை வழங்கிடுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநரை இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்துகிறது.

2022 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 16–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.P.மகேந்திரன்,
கதவு எண்.16, சவேரியர்பாளையம்,
காஞ்சிபுரம் ரோடு, வந்தவாசி – 604 408,
திருவண்ணாமலை மாவட்டம்.

2) ஆணையாளர், வந்தவாசி நகராட்சி,
திருவண்ணாமலை மாவட்டம் – 604 408.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

5) இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை துறை,
நெ.571, அண்ணாசாலை, நந்தனம், சென்னை 600 035.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளருக்காக

20/06/22

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032